ஆண்டு அறிக்கை

2006

இலங்கை போக்குவரத்துச் சபை

உள்ளடக்கம்

01 தொலை நோக்கு, குறிக்கோள், நோக்கங்கள்

02 அறிமுகம்

03 தலைவரின் செய்தி

04 செயற்பாடு

05 இறுதி கணக்குகள்

06 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தொலை நோக்கு

பிராந்தியத்தின் அதி சிறந்த பயணிப் போக்குவரத்தாளர்.

குறிக்கோள்

பொதுமக்களுக்கு பாதுகாப்பான , நம்பத்தகுந்த , வசதிகளுள்ள வீதிப்பயணிப் போக்குவரத்துச் சேவையை நியாயமான கட்டண முறையின் கீழ் சேவை அர்ப்பணிப்புடன் செயலாற்றும் உற்பத்திவளமிக்க பணியாளரின் மூலம் ,சகல வளங்களையும் உச்சநிலையில் பயன்படுத்தி பெற்றுக்கொடுத்து பொருளாதார ரீதியில் சமநிலையைப் பேணும் நிறுவகமாக இயங்கல்.

நோக்கங்கள்

01. 12 பிராந்திய காரியாலயங்கள் மூலம் சிறந்த தர முடைய பயனுடைய பஸ்சேவைகளை ஊக்குவித்து அவற்றை கண்காணித்து இணைத்து ஆலோசனை வழங்குதல்

02. பாடசாலை செல்லும் சிறார்களுக்கு திருப்திகரமான பஸ் சேவைகளை அளித்தல்

03. பண நோக்கங்களுக்காக தனியார்துறையினரால் செயலாற்றப்படாமல் அசட்டை செய்யப் பட்டுள்ள வருவாயற்ற பாதைகளில் பஸ் சேவைகளை அளித்தல்

04. புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்திலிருந்து தூர இடங்களுக்கு பஸ் சேவைகளை அளித்தல்

05. பொது , தனியார் துறை போக்குவரத்து முகவர் நிலையங்களை இணைத்தல்.

06. விழாக்கள் , விசேட வைபவங்கள் , பாராளுமன்ற/மாகாண சபைத் தேர்தல்கள் முதலிய தேவைகளுக்கு பஸ் சேவைகளை இணைத்தல்.

07. தபால்களையும் , பத்திரிகைகளையும் பஸ்களில் ஏற்றிச் செல்லல்.

08. பஸ் செயலாற்றத்திற்காக பொது திறைசேரி , தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மாகாணசபைகள் , உரிய அமைச்சுகள் அத்துடன் இதர தொடர்புடைய முகவர் நிலையங்கள் ஆகியவற்றுக்கும் பிராந்திய காரியாலயங்களுக்குமிடையே இணைப்பை ஏற்படுத்துதல்.

09. இ.போ. சபை சாரதிப்பயிற்சி சாலைகளிலிருந்து நன்கு பயிற்றப்பட்ட ஒழுக்காற்றுடைய சாரதிகளை அளித்தல்.

10. சாரதிகளுக்கும் , நடத்துனர்களுக்கும் , பொறிவலர்களுக்கும் , மேற்பார்வை பணியாளர் களுக்கும் கருத்தரங்குகள் / தொழில் பாசறைகள் ஆகியவற்றை நடாத்துதல்.

11. பிராந்திய வேலைக்களங்களால் உற்பத்தி செய்யப்படும் அலகுகள்/துணை அலகுகள் ஆகியவற்றை சாலைகளுக்கு அளித்தல்.

12. வயது வந்தோர்களுக்கும் , பாடசாலை மாணவர்களுக்கும் கவர்ச்சிகரமான கழிவு வீதங் களில் பருவ சீட்டுகளை அளித்தல்.

13. முக்கியமான மாற்று உறுப்புகளை மாகாண வேலைக்களங்களுக்கு விநியோகிப்பதற்காக நாரஹேன்பிட்டியிலுள்ள இ.போ.சபை தலைமை அலுவலகத்தில் இடைப்பெயர்சி களஞ்சியமொன்றை பேணல்.

14. சாலைகளில் பாதுகாப்பு புலனாய்வுகளையும் , திடீர் பரிசோதனைக்குழு செவ்வை பார்த்தல் முதலியவற்றையும் நடாத்துதல்.

அறிமுகம்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு போக்குவரத்தின் எல்லா அம்சங்களும் அவசியமானது என்பதில் ஐயத்திற்கிடமில்லை. இக்கூற்றுக்கு வீதிப் பயணப் போக்குவரத்து விதிவிலக்கல்ல. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாட்டில் கிராமங்களையும், நகரங்களையும் அதன் மூலம் முழு நாட்டையுமே இணைக்கும் முக்கிய பாத்திரத்தை பஸ் வண்டி வகிக்கின்றது.

1957.10.31 ஆம் திகதி 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகார சட்டத்தின் பிரகாரம் நாடு முழுவதும் 80 பஸ் செயலாற்றுனநர்களால் மொத்தமாக 1200 பாதைகளில் செயலாற்றப்படட 3532 பதிவு செய்த பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டன. இதன் விளைவாக 1958.01.01 முதல் இலங்கை போக்குவரத்து சபை உருவாகியது.

அன்று முதல் 1977 ஆம் ஆண்டு வரை இ.போ.சபை வீதிப் பயணப் போக்குவரத்தில் ஏகபோக உரிமையைக் கொண்டிருந்தது. 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க போக்குவரத்துச் சபை சட்டத்தின் மூலம் இ.போ.சபையினால் இணைக்கப்பட்ட 10 பிராந்திய போக்குவரத்து சபைகள் 1978 ஆம் ஆண்டு இ.போ.சபையை பன்முகப்படுத்தியதன் மூலம் உருவானது. சிறியஅளவிலான அலகுகள் உள்ளூர் பிராந்திய தேவைகளுக்கும், உள்ளூர் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவான தீர்வு கண்டு பயணம் செய்யும் பொதுமக்களுக்கு வினைத்திறனுடைய பயனுள்ள விளைவுகளை இ.போ.ச பன்முகப்படுத்தவதன் மூலம் அடையலாம் என அரசு கருதியது.

ஆயினும் இ.போ.ச. தொடர்ந்து பெருவாரியான நட்டத்தில் இயங்கியமையினாலும், பொருளா தாரம் சுதந்திர மயமாக்கப்படல் வேண்டுமென்ற நவீன எண்ணக்கருவினால் உருவாகிய பயணத் தேவையை பூர்த்தி செய்ய முடியாமையினாலும் வீதிப் பயணிப் போக்குவரத்துக்கு தனியார் துறையை அனுமதிப்பது என முடிவு செய்யப்பட்டது.

பொதுத் துறையை மீள அமைக்கும் பணியில் ஒரு பகுதியாக இ.போ.ச. மக்கள் மயமாக்கப் படுவதற்கென அடையாளம் காணப்பட்டது. அரசு தனியார் மயப்படுத்தலில் உறுதியான நம்பிக்கையை வைத்திருந்தமையால் இம் மாற்றம் அரச கூட்டுத்தாபனங்களை அதாவது அரச உடைமையாக்கப்பட்ட வியாபார முயற்சிகளை பொது கம்பனிகளாக மாற்றும் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அதிகார சட்டத்தின் கீழ் இடம்பெற்றது.

மக்கள் மயமாக்கப்படுத்தலின்போது இயங்கிய 93 போக்குவரத்து சபை சாலைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறான வரையறுக்கப்பட்ட கம்பனிகளாகின. ஊழியர்களின் மத்தியில் கம்பனியின் மொத்தப் பங்குத் தொகையின் அரைவாசி விநியோகிக்கப்பட்டு மீதிப் பகுதியை பொதுத் திறைசேரி வைத்திருந்தது. பெரும்பாலும் ஊழியர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை இக் கம்பனிகளின் நிர்வாகத்தை நடத்தியது. மக்கள்மயமாக்கள் ஏனோ தானோ என்ற முறையில் செயற்படுத்தப்பட்டமையால் விரும்பிய விளைவுகளை எட்ட முடியவில்லை.

எனவே 1997 ஆம் ஆண்டு 1991 ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தின் திருத்த மூலம் பஸ் கம்பனிகள் 11 கொத்தணி பஸ் கம்பனிகளாக மாற்றப்பட்டன. கொத்தணி பஸ் கம்பனிகளாலும் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. அதிக பணியாளர், ஒழுக்காற்றில் பெருவீழ்ச்சி, நியாயமற்ற போட்டி, சமூகக்கடப்பாடுகள், தொழில் முறைமையின்மை, வினைத்திறன்மையின்மை, செயலாற்று செலவுகளில் உயர்ச்சி, அரசியல்,தொழிற்சங்க முறையற்ற தலையீடு, கட்டுமீறிய ஊழல் ஆகியன கொத்தணி பஸ் கம்பனிகளைில் நிலவிய சில பிரச்சனைகளாகும்.

மேற்குறித்த பிரச்சனைகளுக்கு தீர்வினைக் காணும் பொருட்டு 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் 2005.10.19 ஆம் திகதி முதல் இலங்கை போக்குவரத்துச் சபை தாபிக்கப்பட்டது.

தலைவரின் செய்தி

2006 ஆம் ஆண்டில் இ.போ.சபையில் நடைபெற்ற முக்கியமான விேட விடயமாக, அதுவரையும் செயற்பட்டு வந்த இ.போ.சபையுடன் தொடர்புடைய கொத்தணி பஸ்கம்பனிகள், இலங்கை மத்திய போக்குவரத்து சபை மற்றும் பிராந்திய போக்குவரத்து சபைகள் மற்றும் தொடர்புடைய சகல நிறுவனங்களும் ஒன்றாக்கப்பட்டு 2006 ஆம் ஆண்டில் இ.போ.ச உருவாக்கப்பட்டமை 2006 ஆம் ஆண்டினை விேடமான தொரு ஆண்டாக நாம் குறிப்பிட்டு கூற முடியும். அதன்படி மீண்டும் ஒரு முறை சகல ஊழியர்களினதும் செயற்பாடுகள், அரச பஸ் போக்குவரத்து சேவையின் செயற்பாடுகள் ஆகியன தனி ஒரு நிறுவனத்தின் கீழ் நியமிக்கப்படும் ஊழியர்களிடமிருந்து பெறப்படும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டது. பொதுமக்களைப் பொறுத்தமட்டில் இந்த மாற்றமானது நல்லதொரு அபிப்பிராயத்தையும், நம்பிக்கை ஒன்றையும் மக்கள் மனதில் ஏற்படுத்தியுள்ளதாக அறியக் கூடியதாக உள்ளது.

இ.போ.சபை தாபிக்கப்பட்டது, காலத்தின் தேவைக்கேற்ப எடுக்கப்பட்ட தீர்மானமாகும். இவ் அமைப்பின் உருவாக்கத்துடன் நிறுவனத்தில் பெரியதொரு எழுச்சியைக் காணக்கூடியதாக இருந்தது. பஸ்வண்டிகளை சுத்தமாக வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை, பஸ் வண்டி பயணம் மேற்கொள்ளும் இடம் பற்றிய பெயர் பலகை சரியான முறையில் தயாரிக்கப்பட்டமை, சகல பஸ் வண்டிகளும் சிவப்பு நிறமாக மாற்றப்பட்டமை என்பவை பிரதான இடத்தை வகித்ததுடன், பஸ்வண்டிகளில் எந்தவொரு விளம்பர அறிவித்தல்களையும் காட்சிப்படுத்துவதற்குஅனுமதி வழங்கக்கூடாது என எடுக்கப்பட்ட முடிவும் மிகவும் பாராட்டப்படக்கூடிய விடயமாகும்.

மக்களின் பயணத் தோழன் என்ற வகையில் பொதுமக்களுக்கு மிகவும் நெருக்கமான சேவையினை திருப்திகரமான முறையில் வழங்கும் ஊழியர்களின் அவசியம் மற்றும் அர்ப்பணிப்பு இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டும். இ.போ.சபை படிப்படியாக அடைகின்ற இந்த முன்னேற்றமானது சகல ஊழியர்களினாலும் வழங்கப்படும் கூட்டு ஒத்துழைப்பினாலே ஆகும் என்றால் அது மிகையாகாது.

பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவை பற்றி குறிப்பிடுகையில், இ.போ.சபை தாபிக்கப்பட்டதன் பயனாக 2005 ஆம் ஆண்டில் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்ட நாளாந்த செயலாற்றுகை கி.மீ அளவினை 2006 ஆம் ஆண்டில் அதிகரிக்க முடிந்துள்ளமையை விேடமாக குறிப்பிட்டு கூறலாம். அதன்படி 2005 ஆம் ஆண்டில் நாளாந்த செயலாற்றுகையான 679,091 கி.மீ அளவானது 2006 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 713,753 கி.மீ அளவாக அதிகரித்துள்ளது.

செயலாற்றப்படும் கி.மீ அளவு மாறுவதற்கேற்ப வழிப்பட்டியல் வருமானமும் கூடிக் குறைவதை வதை தவிர்க்க முடியாது போனாலும், 2005 ஆம் ஆண்டை விட 2006 ஆம் ஆண்டில் 35,000 கி.மீற்றறினால் நாளாந்த செயலாற்றுகை கி.மீ அளவு அதிகரித்தபோது வழிப்பட்டியல் வருமானமும் 4.1 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது. இது ஒரு பாரிய அதிகரிப்பாகும். இவ் விடயத்தை கவனிக்கும் போது, பொதுமக்கள் இ.போ.சபையின் நற்பெயருக்கு வலுவான ஆதரவை வழங்கியுள்ளார்கள் என்று நற்சான்றிதழ் வழங்க முடியும்.

இந்த நிலைமைகள் யாவும், நிறுவனத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்கான ஒரு ஊக்குவிப்பாக அமைந்ததுடன் , பொதுமக்களுக்கு சிறந்த மற்றும் நம்பிக்கையான சேவையை வழங்கும் அதேவேளை, நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு விசாலமானதொரு வேலைத்திட்டம் ஒன்றினை பொறுப்பேற்று 2007ஆம் ஆண்டிலும் மென்மேலும் சாதனைகளை அடைவதற்கு தீர்மானங்களை எடுப்பது அவசியம் என்று இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

சசி வெல்கம
தலைவர்
இலங்கை போக்குவரத்து சபை.

திட்டமிடல், அபிவிருத்தி பகுதி

சகல சாலைகள் மற்றும் பிராந்திய அலுவலகங்களினது வருடாந்த இலாப நட்டக் கூற்றுகள் பெறப்பட்டு ஒன்றுதிரட்டிய இலாப நட்ட கூற்று ஒன்றினை தொகுத்தெடுத்தல், இந்த அறிக்கைகளின் அடிப்படையில் பகுப்பாய்வு அறிக்கைகளை தயாரித்தல், பிராந்திய முகாமையாளர்கள் கலந்து கொண்ட தலைவர், பொது முகாமையாளர் ஆகியோரால் நடத்தப்பட்ட பிரதான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் சாலைகளினது செயலாற்றுகை அபிவிருத்திக்கான தீர்மானங்களை எடுப்பதில் இவ் அறிக்கைகள் பெரிதும் உதவியாக இருந்தன.

காலாண்டுக்கொரு முறை செலவு (Credit) மற்றும் விபத்து தொடர்பான அறிக்கைகள் தயாரித்தல், வருவாயற்ற பாதைகளில் நடைபெறும் போக்குவரத்துக்காக வழங்கப்படும் உதவு தொகைகள் தொடர்பில் அறிக்கை தயாரித்தல், இவ் அறிக்கைகளை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல். ரயர் பாவனை மற்றும் ரயர் பயன்படுத்தப்படும் கி.மீ துாரங்கள் பற்றிய அறிக்கை கள் , சாரதி பயிற்சி பாடசாலைகள் , மாகாண வேலைக்களங்கள் மற்றும் சுற்றுலா பங்களாக் களின் இலாப நட்டக் கூற்றுகள் தயாரித்தல். இவ் அறிக்கைகள் அனைத்தும் இந்த நிறுவனங்க ளின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதிலும், அவை தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதிலம் பெரிதும் உதவியாக இருந்தன.

உள்ளகக் கணக்காய்வு பகுதி

2006 ஆம் ஆண்டில் 1001 கணக்காய்வு விசாரணை அறிக்கைகள் வெளியிடப்பட்டது. இந்த கணக்காய்வு விசாரணை அறிக்கைகளின் படி ரூபா 7,275,224.81 அறவிடப்படவேண்டியிருந்தது.

செயலகப் பகுதி

2006ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை கிரமமாக கூட்டப்பட்டதுடன், அவ்வருடத்தில் 10 பணிப்பாளர் சபைக் கூட்டங்களும் கூட்டப்பட்டது.

கேள்விச் சபை

சாலைகள் , தலைமை அலுவலகம் ஆகியவற்றின் அச்சிடல் தேவைகளுக்கா கேள்விபத்திரங்கள் கோருவதற்கு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டது.

சாலைகள் , தலைமை அலுவலகம் ஆகியவற்றின் அலுவலக உபகரணங்கள் கொள்வனவுக்காக கேள்விபத்திரங்கள் கோரப்பட்டதுடன் அனுமதிக்கப்பட்ட விலைகளும் பெறப்பட்டன.

சாலைகள் , மாகாண வேலைக்களங்களுக்குத் தேவைப்படும் வாகன உதிரிப் பாகங்கள் கொள்வனவுக்கு கேள்விபத்திரங்கள் கோரப்பட்டதுடன் அனுமதிக்கப்பட்ட விலைகளும் பெறப்பட்டன.

சிவில் பொறியியல் வேலைகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டன.

பாவனையிலில்லாத கழித்துவிடப்பட்ட பஸ்கள் மற்றும் கழித்துவிடப்பட்ட பொருட்களின் விற்பனை க்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

பாதுகாப்புப் பகுதி

இ.போ.சபைக்குரிய பிராந்திய அலுவலகங்கள், சாலைகள், உப சாலைகள், பிராந்திய வேலைக்களங்கள், சாரதிகள் பயிற்சி கல்லூரி ஆகிய சகல நிலையங்களுக்கும் உரியதாக சமா்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான முறைப்பாடுகள் மற்றும் நாடு முழுவதும் பயணம் செய்யும் பயணிகளின் எழுத்து மூலமான முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

தீ அணைப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

2006 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை 250 ஆகும்.

இ.போ.சபை சாா்ந்த வழக்குகள் தொடர்பில் பிணைப்பணம் கொண்டு செல்லல் மற்றும் தலைமை அலுவலக நிதிகளை எடுத்து செல்லும் நடவடிக்கைகள் தொடர்பில் நாளாந்த வழித்துணை பாதுகாப்பு வழங்கள்.

இ.போ.ச. தலைமை அலுவலகத்தின் கீழ் உள்ளடங்கும் சகல சேவை நிலையங்களிலும் சேவையாற்றும் ஊழியா்களுக்கு நேரடியாக இலவச பயண அனுமதிப் பத்திரம் வழங்குதல்

வாணிப , விநியோகப் பகுதி

2006 ஆம் ஆண்டில் பிராந்தியங்கள் மற்றும் மாகாண வேலைக்களங்களுக்கான மோட்டாா் உதிரிப்பாகங்கள், ரயா்கள், பற்றறிகள் போன்ற சகல தேவைப்பாடுகளும் இலங்கை போக்குவரத்து சபையின் விநியோகப்பகுதியினால் மேற்கொள்ளப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தை செயற்படுத்து வதற்கு தலைமைக் காரியாலயத்தில் உள்ள பிரதான களஞ்சியம், கட்டுப்பெத்தையில் உள்ள மத்திய களஞ்சியம் ஆகியன பயன்படுத்தப்பட்டன.

புதிய இயந்திர தொகுதிகள் விசேஷமாக கட்டுப்பெத்தை மத்திய களஞ்சியத்தில் களஞ்சியப்படுத் தப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

பரிசீலனையில் உள்ள ஆண்டில் பிராந்தியங்கள், சாலைகள் மற்றும் மாகாண வேலைத்தளங் களுக்கு விநியோகிக்கப்பட்ட மாற்றுறுப்புகளின் பெறுமதி கீழே காட்டப்பட்டுள்ளது.

ஆண்டு	கட்டுப்பெத்தை மத்திய களஞ்சியம்	பிரதான களஞ்சியம், நாரேஹேன்பிட்டி	மொத்தம்
2006	ரூபா. 92,896,796.00	ரூபா. 42,754,112.67 (மாற்றுப்புகள்) ரூபா. 129,990,00 (ரயா் தொகுதிகள்) ரூபா. 112,500.00 (பற்றிகள்)	ரூபா. 42,996,602.67



செயலாற்றுப் பகுதி

விபரம்	2004	2005	2006
பஸ் கூட்டம்	8,436	8,455	8,852
செயல்படும் நிலையில் உள்ள பஸ்களின் எண்ணிக்கை	4,648	4,646	4,077
செயலாற்றிய பஸ்களின் எண்ணிக்கை	4,133	3,673	3,776
செயல்படும் நிலையில் உள்ள பஸ் கூட்டத்தின் படி செயலாற்றிய பஸ்களின் வீதம்	88%	79%	93%
பஸ் கூட்டத்தின் படி செயலாற்றிய பஸ்களின் வீதம்	49%	43%	43%
மொத்த செயலாற்றிய கி.மீ	285,380,970	247,868,440	260,519,896
மொத்த வருமானம் (ரூபா)	8,999,260,896	10,007,350,024	12,668,277,961
வழிப்பட்டியல் வருமானம் (ரூபா)	6,030,446,074	6,416,986,740	7,917,292,096
மொத்த வருமானத்தில் வழிப்பட்டியல் வருமான வீதம்	67%	61%	62%
கி.மீற்றர் ஒன்றுக்கான வருவாய் (ரூபா)	31.50	40.30	48.63
கி.மீற்றர் ஒன்றுக்கான செலவு (ரூபா)	35.49	46.53	52.40
கி.மீற்றர் ஒன்றுக்கான இலாபம் / (நட்டம்)	-3.99	-6.23	-3.77

1. நாளொன்றுக்கு செயலாற்றிய கி.மீ

வருடம்	நாளொன்றுக்கு செயலாற்றிய கி.மீ
2004	779,729
2005	679,091
2006	713,753



2. நாளொன்றுக்கு பஸ் ஒன்றின் பயன்பாடு

வருடம்	நாளொன்றுக்கு பஸ் ஒன்றின் பயன்பாடு
2004	கி.மீ 189
2005	கி.மீ 184
2006	கி.மீ 189

3. **நாளொன்றுக்கு வழிப் பட்டியல் வருமானம்**

வருடம்	நாளொன்றுக்கு வழிப் பட்டியல் வருமானம்
2004	ரூபா.16,476,629
2005	ரூபா.17,580,786
2006	ரூபா.21,691,211



4. **நாளொன்றுக்கு பருவகாலச்சீட்டு வருமானம்**

வருடம்	நாளொன்றுக்கு பருவகாலச்சீட்டு வருமானம்
2004	ரூபா.737,779
2005	ரூபா.780,646
	ரூபா.544,749



தொழில்நுட்பப் பகுதி

மாகாண வேலைக்களங்களினூடாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் உற்பத்தி பெறுமதி

வகை	அலகுகள்	பெறுமதி
எஞ்சின்	663	69,615,000
கியர் பெட்டி	411	18,289,500
அக்சல்	135	6,750,000
பஸ்உடற்கோப்புகள்	137	18,152,500
பம் பழுது பார்த்தல்	442	3,094,000
இன்ஜெக்ரர்	1,202	901,500
ரயர்	1,415	2,971,500
		119,774,000





புதிய பஸ்கள் வழங்கள்

2006 ஆம் ஆண்டில் 960 புதிய பஸ்கள் வழங்கப்பட்டன.

திடீர் பரிசோதனைக் குழு பிரிவு

வழிப் பட்டியல் வருமானத்தில் ஆகக் குறைந்தது 25 % முறையற்ற விதத்தில் கையாளப்படுகிறது. ஆதலால் விசேட திடீர் பரிசோதனை குழு ஈடுபடுத்தப்பட்டது. வருமான இழப்பு பின்வரும் புள்ளி விபரங்களில் காட்டப்பட்டுள்ளது.

வருடம்	பாரதூரமான மோசடி	சிறிய மோசடி	பற்றுச்சீட்டின்றி பயணம் செய்த பிரயாணிகளிடமிருந்து அறவிட்ட தண்டப் பணம்
2006	1,531	7,609	2,082,980.50 ரூபா

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல ஏஜி/ரீ/எஸ்ரீபீ/எப்ஏ/2006
My No.

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி 2012 திசெம்பர் 06
Date

தலைவர்
இலங்கை போக்குவரத்துச் சபை

இலங்கை போக்குவரத்துச் சபையின் 2006 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை போக்குவரத்துச் சபையின் 2006 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2006 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. 2006 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை உரிய காலப்பகுதிக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை இதுவரையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயமாக சமர்ப்பிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887220
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887221
ඉලෙක්ට්‍රොනික තැපැල් / ஈ-மெயில் / E-mail: oaggov@sltnet.lk

உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ளமுடியாதுள்ளேன்

1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2.4, 2.2.5., 2.2.6, 2.2.7 மற்றும் 2.2.8 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று என்பவற்றைத் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

1.5 ஸ்தாபித்தல்

2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் 2005 ஒக்டோபர் 19 ஆந் திகதிய 1415/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட போக்குவரத்து அமைச்சின் கட்டளையின் பிரகாரம் 2005 ஒக்டோபர் 19 ஆந் திகதியிலிருந்து அந்த அதிகாரச்சட்டம் அமுலுக்குவருவதுடன் அதற்கிணங்க அத்திகதியிலிருந்து அப்போது காணப்பட்ட வரையறுத்த வவுனியா மக்கள் மயமாக்கப்பட்ட பிரயாணிகள் போக்குவரத்து சேவை, 11 ஒருங்கிணைந்த மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ் கம்பனிகள், 11 பிராந்திய போக்குவரத்துச் சபைகள் என்பன போக்குவரத்துச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. இவ்வாறே இந்த நிறுவனங்களின் சொத்துக்களையும் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2.4, 2.2.5, 2.2.6, 2.2.7 மற்றும் 2.2.8 ஆம் பந்திகளில் காட்டப்பட்டுள்ள முக்கியமான விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதன் காரணமாக இந்த நிதிக் கூற்றுக்களின் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதில் தாமதம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2007 பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்கள் 2011 பெப்ரவரி 21 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நடைமுறையற்ற பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 3,658,293 தொகையான நம்பிக்கைக் காப்புறுதிப் பிணைப் பணம் பிழையாக மீளாய்வாண்டிற்காகக் கிடைக்க வேண்டிய மீதியாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டதன் காரணமாக தொழிற்படு மூலதனம் ரூபா 7,316,586 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. இப்பிழையான கணக்கீட்டின் காரணமாக கணக்குகளிலுள்ள வேறுபாடுகள் தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தன.

(ஆ) நாடு முழுவதும் அமைந்துள்ள கொத்தணி பஸ் கம்பனிகள் அனைத்து பிராந்திய போக்குவரத்துச் சபைகள், வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவை என்பன 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கலைக்கட்டு அந்த அதிகாரச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த நிறுவனங்களின் ரூபா 38,531.1 மில்லியன் கூட்டுத்தொகையான அனைத்து சொத்துக்களும் பொறுப்புக்களும் சபைக்கு ஒப்படைக்கப்படும் போது அச் சொத்துக்கள் மீள் மதிப்புச் செய்தல் இடம்பெறாதிருந்ததுடன் பொறுப்புக்கள் தொடர்பாக எதுவித உறுதிப்படுத்தல்களும் இடம் பெற்றிருக்கவில்லை.

(இ) கிழக்கு மற்றும் ஊவா பிராந்திய போக்குவரத்துச் சபைகளின் ரூபா 21,035,665 கூட்டுமொத்தமான நிலையான சொத்துக்களுக்குரிய திரண்ட பெறுமானத்தேய்விற்கான ஏற்பாட்டுக் கணக்கு பேணப்படாதிருந்ததுடன் அக்கம்பனிகளை ஒப்படைக்கும் போது திரண்ட பெறுமானத் தேய்வுப் பெறுமதி சரியாகக் கணிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்படைக்கப்பட்டதன் பின்னரும் சபையினால் பெறுமானத் தேய்விற்கான ஏற்பாட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இறுதிக் கணக்குகளில் சபையின் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 316.523 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் காணிகளினதும் கட்டிடங்களினதும் பெறுமதி தனித்தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், காணிகளின் பெறுமதியானது காட்டப்பட்ட பெறுமதியின் 50% ஆகிய ரூபா 158.261 மில்லியனாகக் கருதி அதன் அடிப்படையில் மீளாய்வாண்டிற்காக நேர்கோட்டு முறைமையின் அடிப்படையில் 2.5% ஆகிய ரூபா 3.956 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலும் குறிப்பிடப்படாதிருந்ததுடன் அச்சொத்துக்களை மெய்மையாய்வு செய்வதற்காக அதற்குரிய சான்றுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2006 ஆம் ஆண்டில் விற்கப்பட்ட பாவனையிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த 91 பஸ்களுக்காகக் கிடைத்த ரூபா 8,295,899 தொகை வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதிலும் விற்கப்பட்ட பஸ்கள் தொடர்பான தகவல்களை தேடிக் கண்டுபிடிக்க முடியாமையின் காரணமாக பஸ்களின்

விற்பனையிலிருந்தான இலாப நட்டங்களைக் கணிப்பதற்காக தேவையான கணக்கு குறிப்புக்கள் வைத்திருக்கப்படவில்லை.

2.2.3 தீர்த்துவைக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) பழுதடைந்த பொருட்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 33.31 மில்லியன் மீதி பல ஆண்டுகளாக முன்கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் உரிய பொருட்களின் விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 1,446.2 மில்லியன் தொகையான இருப்புக்களின் பெறுமதியின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் இலக்கம் 371 இன் பிரகாரம் முற்பணங்களைப் பெற்றுக்கொண்ட செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 2005 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 798,223 தொகையான நானாவித முற்பணத் தொகைகளும் ரூபா 4,095,073 தொகையான கொள்வனவு முற்பண மீதியும் மீளாய்வாண்டின் இறுதிவரையும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்பாடற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான ரூபா 1,221.307 மில்லியன் தொகையான கணக்கு மீதிகளைப் பதிவழிப்பது சம்பந்தமாக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் 2002 யூலை 30 ஆந் திகதி சபை அரசாங்க முயற்சிகள் திணைக்களத்திடம் கோரியிருந்தது. அம்மீதி தொடர்பாக முழுமையாகப் பரிசீலித்து பணிப்பாளர்கள் சபையின் விளக்கம் மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீதிகளைப் பதிவழிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2005 ஒக்டோபர் 18 ஆந் திகதிக்கு முன்னர் காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் 05 கணக்கு மீதிகள் முறையே ரூபா 735,590,503 மற்றும் ரூபா 9,347,924,931 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் விசாரணைகளை மேற்கொண்டு தீர்த்துவைப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 4,636,049,944 தொகையான ஏனைய நடைமுறையற்ற பொறுப்புக்களின் மீதி 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வருவதுடன் அம்மீதிகளை மீளாய்வாண்டின் போதாவது மெய்மையாய்வு செய்து தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 தொங்கல் கணக்குகள்

பிரதான பேரேட்டின் படி பல ஆண்டுகளாக முன்கொண்டு வரப்பட்டு வருகின்ற 10 தொங்கல் கணக்குகளில் 3 கணக்குகளின் வரவு மீதிகளின் ரூபா 27,943,916 கூட்டுமொத்த தொகையும் 08 கணக்குகளின் செலவு மீதிகளின் ரூபா 391,485,225 கூட்டுமொத்தத்தொகையும் மீளாய்வாண்டின் போது கூட தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) ரூபா 1,845,086,728 கூட்டுமொத்தமான பெறவேண்டிய ஏனைய பெறுவனவு மீதிகள் அறவிடப்படாது முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 104,243,094 மீதிகளின் கூட்டுத்தொகை 22 ஆண்டுகளாக முன்கொண்டுவரப்பட்டு வருபவையாகும். எஞ்சிய ரூபா 1,740,843,634 தொகையான மீதிக்கான காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இக்கடன் மீதிகள் தொடர்பாக கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பெறவேண்டிய ஏனைய பெறுவனவு மீதியில் உள்ளடக்கியிருந்த ரூபா 1,373,724,561 தொகையான நானாவித கடன்பட்டோர் மீதி மொத்த கடன்பட்டோர் பெறுமதியில் 74% ஆக இருந்ததுடன் அதில் 61% அளவானவை தலைமை அலுவலகம் தொடர்பான கடன்பட்டோர்களாகும். பணத்தை அறவீடு செய்வதற்கு சகல நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அம் மீதி தொடர்பாக எதுவித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) லக்திவ பொறியியலாளர் கம்பனியிடமிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 4,350,523 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக எழுத்துமூலச் சான்று எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 4,671,629,313 கூட்டுமொத்தமான கடன்கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வரும் தலைமை அலுவலகத்திற்குரிய 10 கடன்கொடுத்தோர் கணக்குகளின் ஆரம்ப மீதிகள் ரூபா 1,219,700,516 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் மீளாய்வாண்டு வரை அந்த மீதியினைத் தீர்த்துவைப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அந்த மீதிகளுக்குரிய தொடக்க ஏடுகளும் பதிவேடுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் முன்னைய பல ஆண்டுகளாகக் காணப்பட்டு வரும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்குச் செலுத்த வைக்கப்பட வேண்டிய ரூபா 1,227,087 தொகையான கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கூட அவற்றினைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

(அ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதி உறுதிப்படுத்தப்படாமை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக அவற்றிற்கு எதிராக காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

விடயம்		பெறுமதி	சமர்ப்பிக்கப்படாத சான்று
		ரூபா	
(i)	நிலையான சொத்துக்கள்	13,808,944,429	சொத்துக்கள் பதிவேடு
(ii)	முதலீடு	148,896,252	(i) முதலீடுகளின் விபரங்களைக் காண்பிக்கும் பட்டோலை (ii) மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்
(iii)	நானாவித கடன்பட்டோர்	1,845,086,728	(i) மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (ii) காலப்பகுப்பாய்வு
(iv)	கடன்கொடுத்தோர்	4,671,629,313	(i) தனித்தனி கணக்குகள் தொடர்பான விபரம் (ii) காலப்பகுப்பாய்வு

(ஆ) சொத்துக்களின் பௌதீக உள்ளமை உறுதிப்படுத்தப்படாமை

டிப்போ, பிராந்திய அலுவலகம், பிராந்திய வேலைத்தளங்கள், சாரதி பயிற்சிக் கல்லூரி, சுற்றுலா இல்லங்கள் என்பவற்றிலுள்ள நிலையான சொத்துக்கள், இருப்பு, ஏனைய சொத்துக்கள் என்பவை பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த அறிக்கையினைக் கவனத்திற் கொள்ளாது சபையின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள ரூபா 6,776,263,703 தொகையான சொத்துக்களின் மீதிகளின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(இ) நிலையான சொத்துக்களைப் பொறுப்பேற்றல்

11 பஸ் கம்பனிகளுக்குரிய 2005 ஒக்டோபர் 18 ஆந் திகதியில் உள்ளவாறான பெறுமானத்தேய்வு கழித்த ரூபா 3,141,290,735 பெறுமதியான நிலையான சொத்துக்கள் 07 பிராந்திய போக்குவரத்துச் சபைகளுக்குரிய பெறுமானத்தேய்வு கழித்த ரூபா 370,045,232 பெறுமதியான நிலையான சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன்

இது தொடர்பாக மெய்மையாய்வுச் சபை அறிக்கை அல்லது பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

2.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே தரப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றிற்கான தொடர்பு	இணக்கமின்மை
(அ)	2005 இன் 17 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரச்சட்டத்தின் 33(2) மற்றும் 4 ஆம் பிரிவு மற்றும் 24 ஆம் பிரிவுகள்	இலங்கை போக்குவரத்துச் சபையினாலும் பேணப்பட்டு வருகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தினை தொழில் ஆணையாளரின் அங்கீகாரத்துடன் செயற்பாட்டுக் குழுவினால் நியமிக்கப்பட்ட பரிசோதகர் ஒருவரினால் அல்லது பரிசோதகர்களினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.
(ஆ)	சபையின் ஊழியர் சேமலாப நிதிய பிரமாணக் குறிப்பு மற்றும் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம்	ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து அறவிடப்படுகின்ற சேமலாப நிதிய பங்களிப்பு மற்றும் அதன் அடிப்படையிலான சபையின் பங்களிப்பு உரிய மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்திற்குச் செலவு வைக்கப்படவேண்டிய போதிலும் 2006 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பங்களிப்பு பணம் மற்றும் முன்னைய ஆண்டுகளுக்கான பங்களிப்பு பணத்தினையும் உள்ளடக்கி ரூபா 709.875 மில்லியன் தொகை சபையின் சேமலாப நிதியத்திற்கும் ரூபா 229.488 மில்லியன் தொகை இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுகின்ற ஊழியர் சேமலாப

	நிதியத்திற்கும் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.
(இ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டம்	ஊழியரின் சம்பளத்திலிருந்து 3% இற்குச் சமமான அளவு சபையினால் உரிய மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2006 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பங்களிப்பு பணம் மற்றும் முன்னைய ஆண்டுகளுக்கான பங்களிப்பு பணத்தினை உள்ளடக்கிய ரூபா 52,646,971 தொகை அவ்வாறு செலவு வைக்கப்பட்டிருக்காததுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

3.1 நிதிசார் மீளாய்வு

3.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2006 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை போக்குவரத்துச் சபை ரூபா 6,971,442,683 நட்டத்தினை அடைந்திருந்ததுடன் திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 5,325,640,367 தொகையான மானியத்தின் காரணமாக அந்த நட்டம் ரூபா 1,645,802,316 வரை குறைவடைந்திருந்தது. 2005 ஒக்டோபர் 19 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 31 வரையான 73 நாட்கள் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட இலாபம் ரூபா 117,127,676 ஆக இருந்தது.

3.1.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தோற்றுவிக்கப்பட்ட திகதியாகிய 2005 ஒக்டோபர் 19 ஆந் திகதி பொறுப்பேற்கப்பட்ட 11 பஸ் கம்பனிகளின் வழங்கிய பங்கு மூலதனமும் ஊழியர்களின் பங்கு மூலதனமும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 4,993,886,870 ஆக இருந்ததுடன் கம்பனி பதிவாளர் திணைக்களத்தின் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 4,356,035,020 ஆக இருந்ததனால் ரூபா

637,851,850 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றன.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவேட்டின் பிரகாரம் :-			
- ஊழியர்களுக்கு வழங்கிய பங்குகளின் அளவு	41,114,447		
- திறைசேரிக்கு வழங்கிய பங்குகளின் அளவு	394,489,055		
			435,603,502
பங்குகளின் மொத்த எண்ணிக்கை			
ரூபா 10 ஆக பங்குகளின் பெயரளவுப் பெறுமதி		ரூபா	4,356,035,020
2005 ஒக்டோபர் 18 ஆந் திகதிய புறக் கணக்காய்வாளர்களின் அறிக்கைகளின் பிரகாரம் பங்குகளின் பெயரளவுப் பெறுமதி		ரூபா	4,993,886,370

வேறுபாடு		ரூபா	637,851,850
			==========

(ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு முரணாக 2005 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 25,771.692 மில்லியன் திரண்ட நட்டத்தில் அத்திகதியில் காணப்பட்ட பங்குமூலதனம் மற்றும் ஒதுக்கங்களின் கூட்டுமொத்த தொகையான ரூபா 16,982.029 மில்லியன் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக திறைசேரியினதும் பணிப்பாளர்கள் சபையினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட இறுதிக் கணக்குகளின் பிரகாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைக் கட்டிடக் கணக்கில் 1996 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஒக்டோபர் 18 ஆந் திகதி வரை மாற்றமின்றி ரூபா 35,751,493 தொகை முன்கொணர்ந்து வரப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக ரூபா 7,705,028 தொகையான நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைப் பெறுமதியினையும் உள்ளடக்கி நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைக் கணக்கில் முன்கொணர்ந்துவரப்பட்ட மீதி ரூபா 43,456,521 ஆகும்.

3.2 செயற்பாட்டு மீளாய்வு

3.2.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1958 ஆம் ஆண்டின் போது பஸ் கம்பனிகளை மக்கள் மயப்படுத்தும் போது பறிமுதல் செய்யப்பட்ட காணிகளுக்காக ரூபா 8,299,517 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அச்சந்தர்ப்பங்களில் காணிகளின் மொத்த பெறுமதியினை உரிமையாளர்களுக்குச் செலுத்தாததன் காரணமாக அவற்றின் உரிமையை இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்கு ஒப்படைப்பதற்கு முடியாதிருந்தது. அக்காரணத்தினால் 49 ஆண்டுகளுக்கு அதிக காலமாக செலுத்தப்பட்ட இத் தொகை முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இக்காணிகளின் உள்ளமை மற்றும் உரிமை தொடர்பாக தேடிப்பார்த்து காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்து தீர்த்துவைப்பதற்கு கூட்டுத்தாபனமாக்கியதன் பின்னரும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலைமை அலுவலகத்திற்குச் சொந்தமான ரூபா 22,960,405 கூட்டுமொத்தமான 04 வகையான வைப்புக்கள் 1985 ஆம் ஆண்டிலிருந்து 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகத் தீர்த்துவைக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) 2004 திசெம்பர் மாதத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமை அலுவலகத்தின் மற்றும் பிராந்திய அலுவலகங்களிலுள்ள ஊழியர்களின் சம்பளங்களை அறவிட்டு தீர்த்துவைக்கும் அடிப்படையில் சுனாமி நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 3,403,534 தொகையினைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த நிதியத்திற்கு ரூபா 537,781 தொகை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் அப்பணம் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) ஊழியர்களினால் சபையின் சேமலாப நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மூன்று வகையான கடன்களுக்காக மாதாந்தம் சம்பளங்களிலிருந்து அறவிடப்படும் ரூபா 139,432,115 கூட்டு மொத்த

தொகை முன்னைய ஆண்டுகளிலும் மீளாய்வாண்டின் போதும் நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

3.2.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பாவனையிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்ட பஸ்கள் மற்றும் பாவனையிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்ட ஏனைய வாகனங்களின் பெறுமதி முறையே ரூபா 145,577,126 மற்றும் ரூபா 1,057,421 ஆக ரூபா 146,634,547 கூட்டுமொத்த தொகை பல ஆண்டுகளாக முன் கொண்டுவரப்பட்டுக் காணப்பட்டதுடன் அந்த பாவனையிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்ட வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு அல்லது மீண்டும் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு உரிய காலத்திற்குள் ஊழியர் பங்களிப்பு பணத்தினை செலவு வைக்காததன் காரணமாக தாபன மற்றும் நிருவாகச் செலவுகளில் ரூபா 1,018,730 தொகை பிராந்திய அலுவலகங்கள் மற்றும் டிப்போக்களின் மூலம் மீளாய்வாண்டின் போது மிகைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சேமலாப நிதியத்தின் பங்களிப்பு பணத்தினை உரிய காலப்பகுதிக்குள் செலவு வைக்கப்படாததன் காரணமாக 2006 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு டிப்போவிற்காக ரூபா 5,765,022 தொகையும் பிராந்திய அலுவலகங்களுக்காக ரூபா 1,000 தொகையுமாக ரூபா 5,766,022 கூட்டுமொத்த தொகை மிகைக் கட்டணமாக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிறுவனத்தின் தலைவருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டிருந்ததுடன் பின்வரும் துறைகள் தொடர்பாக முகாமைத்துவத்தின் விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) இருப்புக் கட்டுப்பாடு
(இ) கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும்
(ஈ) பிரதான பேரேட்டினைப் பேணுதல்
(உ) கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தலும் தீர்த்துவைத்தலும்
(ஊ) தோற்றுவிக்கும் போது பொறுப்பேற்ற சொத்துக்களையும் பொறுப்புக்களையும் முறைப்படியாகப் பொறுப்பேற்றல்.

எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்கீட்டு கொள்கைகள்

1. நிதிக் கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமையவும் வரலாறறுச் செலவு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு மரபுக்கமையவும் தயாரிக்கப்பட்டு இ..போ.சபையின் சுற்றியல் அலகுகளின் நிதிப் பெறுபேறுகளுடன் இணைக்கப்பட்டதன் பின்னா் ஒன்று சோ்த்து சமா்ப்பிக்கப்படுகின்றது.

2. ஐந்தொகையும், சபைக் கணக்குகளும் ஆயத்தம் செய்யப்படுவதற்கு பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு அடிப்படைக் கொள்கைகள் பின்பற்றப்பட்டதுடன், திரட்டப்பட்ட வருவாய், செலவு ஆகியவற்றிற்கு கணக்கீட்டு கொள்கைகள் உறுதியாகப் பிரயோகிக்கப்பட்டு அவை தொடா்பான காலத்திற்கு நிதிக்கூற்றுகளில் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன.

3. நிலையான சொத்துகள்

நிலையான சொத்துகள் தேய்மானம் நீங்களாக கொள்விலையில் ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளன. மூலதன நடைபெறும் வேலை நிலையான சொத்துகளாகக் கருதப்படவில்லை. 23,190,343/= ரூபா பெறுமதியான காணிகளில் சபை குடியிருக்கிறது. ஆயினும் இவற்றின் உறுதிகள் இன்னமும் சபைக்குக் கிடைக்கவில்லை இக்காணிகளின் முழுப்பெறுமதி நிலையான சொத்துகளின் கீழ் காட்டப்படவில்லை இக்காணிகளுக்கான கொடுப்பனவு 8,299,517/= ரூபா பெறுமதியானது நிலையான சொத்துகளின் கீழ் முற்பணமாக காட்டப்பட்டள்ளது.

4. தேய்மாணம்

கொள்வனவு செய்யப்படும் வருடத்திற்கு தேய்மாண ஏற்பாடு செய்யபடாததுடன் விற்பனை செய்யப்படும் வருடத்திற்கு முழுமையான தேய்மாண ஏற்பாடு செய்யபடுகின்றது.தேய்மாண ஏற்பாடு நேர்கோட்டு முறையில் பின்வரும் வீதங்களில் செய்யப்படுகின்றது.

கட்டிடம்	2..5%
பஸ் , ஏனைய வாகனங்கள்	12..5%
பொறி, உபகரணங்கள்	10%
தளபாடங்கள்	10%
கணனிகள்	25%

5. பணிக்கொடைக்கான ஏற்பாடு

இளைப்பாறும்போது ஊழியா்களின் ஒவ்வோராண்டு சேவைக்கும் அரை மாதச் சம்பளத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது புத்திசாதுரியமானதும் நீதி நியாயமானதுமாகும்.

6. ஐயத்திற்கிடமான, அறவிடமுடியா சில்லறைக் கடனாளிகளுக்கான எற்பாடு

கணக்கின்படி மொத்தக் கடனாளிகள் ரூபா 1,404,452,978.90/= தொகைக்கு 5% அறவிடமுடியாக் கடன்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

7. முதல் உள்ளே முதல் வெளியே முறையில் கையிருப்பு பெறுமதியிடல் செய்யப்படுகின்றது.